***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

-----

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.***

| | | |
|---|---|---|
| *Case Number* | : | CC 362/2022 |
| *Prosecution Witness* | : | அ.சா.6 |
| *Name* | : | கே.செல்வராஜ் |
| *Father's/Husband Name:* | : | கிருஷ்ணசாமி |
| *Address :* | : | குன்னம் காவல்நிலையம், பெரம்பலூர். |
| *Age* | : | 59 /2024 |

தேதி: 13/02/2024

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது **( எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

நான் தற்போது குன்னம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பெரம்பலூர் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரிலும், நான் பணிபுரிந்த காவல் நிலையத்தில்

பராமரிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 08/11/2021 அன்று நான் பெரம்பலூர் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது பெரம்பலூர் பிரியம் தனியார் மருத்துவனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற பிரசன்னா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவுசெய்தேன். அந்த புகார் வாக்குமுலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையை பெரம்பலூர் காவல் நிலைய குற்ற எண்.1453/2021 ல் இதச பிரிவுகள் 279, 337, -ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5.** பின்பு இவ்வழக்கை விசாரணைக்காக எடுத்துக்கொண்டு அன்றைய தினமே நண்பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நிலவுராஜா , ஞானசேகரன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்பு பார்வை மகசர் சாட்சிகளை விசாரணை

செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6 மற்றும் 7.** பின்பு இந்த வழக்கின் சாட்சிகள் பிரசன்னா, ஹரிஹரன், நடராஜன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்து சம்பவம் உண்மையெனத் தெரியவந்ததால் எதிரியை 02/01/2022 அன்று கைது செய்து பின்பு தக்க பிணையில் விடுவித்தேன். பின்பு இந்த வழக்கில் விபத்திற்குட்பட்ட வாகனங்களை ஆய்வுக்கு அனுப்பி மோட்டார் வாகன ஆய்வாளர் செல்வகுமார் என்பவரை 10/11/2022 விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வுச்சான்று பெற்றேன். . அந்த மோட்டார் வாகன ஆய்வுச்சான்றுகள் **அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9.** பின்பு காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ராஜா என்ற மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் நோயாளிகளுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என் சான்று வழங்கினார்.

VJ PUBLR

பின்பு கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் சட்டப்பிரிவினை இதச.279,338(2) ஆக மாற்றம் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை **அ.சா.ஆ.**10. பின்னர் இந்த வழக்கின் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இதச. பிரிவுகள் 279, 338 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தின் போது வாகனத்தை ஓட்டிச்சென்ற புகார்தாரர் பிரசன்னா என்பவருக்கும் , அவருடன் சென்ற ஹரிஹரன் என்ற நபருக்கும், 17 வயது என்றால் சரிதான். பிரசன்னா சொல்ல சொல்ல இந்த புகார்வாக்குமுலத்தை நான் எழுதினேனா என்றால் ஆமாம். இந்த சம்பவத்தின் போது புகார்தாரர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றுள்ளனர் என்றால் சரிதான். அப்படியானால் ரோட்டில் மேல்புறம் தான் சென்றிருக்கவேண்டும் என்றால் சரிதான். எனது மாதிரி வரைபடத்தின் படி விபத்து ரோட்டின் இடதுபுறம்

LIVE LAW

நடந்துள்ளது என்றால் சரிதான். விபத்து பற்றி எனக்கு 07/11/2021 அன்று இரவு எனக்கு தகவல் கிடைத்தது. ஆனால் நான் 08/11/2021 தேதி புகார்தாரரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சாலை போக்குவரத்திற்கு பாதிப்பாக இருக்கும் என்பதால் விபத்து நடந்த இடத்திலிருந்து வாகனங்களை அப்புறப்படுத்தி வைப்பார்கள் என்றால் சரிதான். வாகனத்தை அப்புறப்படுத்தாமல் இருந்தால் தான் யாரால் எப்படி விபத்து ஏற்பட்டது என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். விபத்தின் போது பிரசன்னா தான் ரோட்டின் மீது வாகனத்தை கொண்டுவந்துள்ளார் என்றால் சரிதான். நான் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

*Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.*

*sd/-*

*Judicial Magistrate No.I,*

*Perambalur.*

JM-I PBLR